நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.82/2020**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 3ம் நாள் வியாழ்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **கிருஷ்ணன்** | **வயது** | : | **40** |
| **த/பெ.** | : **சண்முகம்** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **ஊர்** | : **பூசாரியூர்** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **நாட்றம்பள்ளி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பூசாரியூர் கிராமத்தில் வசிக்கிறேன்.விவசாயம் செய்கிறேன்.ஆடு வளர்க்கிறேன்.வழக்கின் எதிரிகளை தெரியும். ( மனுவின் பேரில் ஆஜரில்லை). 1ம் எதிரி என்னுடைய சித்தப்பா. 2ம் எதிரி எனது சித்தி. 3ம் எதிரி அவர்களது மகன். எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்து வருகிறது.கடந்த 03.07.2018ம்தேதி மதியம் 12.00 – 01.00 மணிக்குள் வழக்கின் எதிரிகள் எனது நிலத்தில் மண்ணை சரித்து கொண்டிருந்தார்கள்.அவர்களது நிலம் மேடாகவும் எனது நிலம் பள்ளமாகவும் உள்ளது. அவர்கள் நிலத்தை சமன் செய்து எனது நிலத்தில் சுமார் 6 அடி துாரத்திற்கு மண்ணனை தள்ளிவிட்டார்.இது சம்மந்தமாக நான் அவர்களிடம் கேட்டுவிட்டு எனது அம்மாவை அழைத்து வருவதற்காக வந்த போது எனது பின்னால் வந்து தகாத வார்த்தைகளால் பேசினார்கள்.1ம் எதிரி சாம்ராஜ் எனது அம்மாவை பார்த்து வாடி தேவிடியா என அசிங்கமாக பேசினார்.3ம் எதிரி ஜெகதீஷ் உங்களை வெட்டி போட்டால் இந்த ஊரில் கேட்பதற்கு நாதி இல்லை என சொன்னார்.1ம் எதிரியை பார்த்து ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என கேட்டேன். 1ம் எதிரி கருங்கல்லையும், 3ம் எதிரி வெட்டு அருவாளையும் வைத்திருந்தார்கள்.யார் எதனால் தாக்கினார்கள் என்று முதலில் தெரியவில்லை. 3ம் எதிரி கத்தியால் என் தலையின் மீது தாக்கினார்.1ம் எதிரி கருங்கல்லால் என் முதுகின் மீது குத்தினார். நான் திருப்பத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலீசார் மருத்துவமனையில் வந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். புகார்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய கல்லை பார்த்தால்

என்னால் அடையாளம் காட்ட இயலும். தற்போது என்னிடம் கல்லை பார்த்தால் அது மாதிரிதான் உள்ளது. மீண்டும் சாட்சி அந்த கல்லை பார்த்து அதே தான் என்று கூறுகிறார். கருங்கல் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எனக்கும் எதிரிகளுக்கும் எத்தனை நாட்களாக பிரச்சனை உள்ளது என்றால் சம்பவத்திற்கு முன்பு இரண்டு மாதமாக பிரச்சனை உள்ளது . போர்வெல் போட்டது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. போர்வெல் என்னை பிரச்சனை என்றால் போர்வெல்லை நானும் 1ம் எதிரியான எனது சித்தப்பாவும் சேர்ந்து போட்டோம்.அதிலிருந்து பிரச்சனை ஏற்பட்டு வருகிறது என்றால் சரிதான். போர்வெல் சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது. பஞ்சாயத்தில் சமாதனம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.சம்பவம் எங்கு நடந்தது என்றால் என் வீட்டில் வாசலில் நடந்தது.என் வீட்டிற்கும் 1ம் எதிரியின் நிலத்திற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் 50 மீட்டர் தூரம் உள்ளது. என் வீட்டின் வாசலுக்கும் சம்பவம் ஏற்பட்ட 1ம் எதிரியின் நிலத்திற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் 400 மீட்டர் தொலைவு இருக்கும்.3ம் எதிரி வெளியூரிலிருந்து வந்தாரா என்றால் ஆத்தூரிலிருந்து வந்தார். மயக்கமாக இருந்ததால் யார் அடித்தார் என தெரியாது என்றால் சரியல்ல.எத்தனை நாட்கள் கழித்து மயக்கம் தெளிந்தது என்றால் மருத்துவமனைக்கு வந்த உடன் மயக்கம் தெரிந்தது. யார் என்னை 108 ஆம்பூலன்ஸ்சில் அழைத்து சென்றார்கள் என்றால் எனது மனைவி அழைத்து சென்றார்.டாக்டர் விசாரித்தார்களா என்றால் போலீசாரும் டாக்டரும் விசாரித்தார்கள்.டாக்டர் விசாரிக்கும் போது எதனால் அடித்ததாககூறியுள்ளேன் என்றால் கருங்கல் கத்தியால் அடித்ததாக கூறியுள்ளேன். கத்தி மற்றும் வெட்டு கத்தி என்பது வேறு என்றால் சரிதான். டாக்டரிடம் வெட்டுகத்தியால் வெட்டியதாக கூறினேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலும் வெட்டுகத்தியால் தான் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவமனைசிகிச்சை முடிந்த பிறகு போலீஸ் ஸ்டேசனுக்கு சென்று எதிரிகளின் மீது வழக்கு போட சொல்லி சென்றேன் என்றால் மருத்துவமனையிலேயே கேஸ் பதிவாகிவிட்டது. 2,3 கையெழுத்துக்கள் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். கையெழுத்தை தமிழ் தான் போடுவேன் என்றால் தமிழிலும், இங்கிலீயும் போடுவேன். அதிகமாக நான் ஆங்கிலத்தில் போடுவேன். என்ன படித்துள்ளேன் என்றால் 5ம்வகுப்பு வரை படித்துள்ளேன். எனது வீடு நிலத்தில் கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.எதிரிகள் மண் சரித்தார்கள் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஜேசிபியில் சரித்தார்கள் என்றால் சரிதான். சரித்துவிட்டு போய்விட்டியிருந்தார்கள்.ஜேசிபியின் டிரைவர், பெயர், ஊர் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.1ம் எதிரி எனது முதுகின் மீது கருங்கல்லால் தாக்கினார் என்று போலீசார் விசாரணையிலும் மருத்துவர் விசாரணையிலும் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவரிடம்

சம்பவம் வீட்டின் வாசலில் நடந்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்கேயோ விழுந்த காயத்தை வைத்து கொண்டு எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை 20 நபர்கள் பார்த்திருப்பார்கள் என்றால் 2,3 நபர்கள் பார்த்தார்கள். சாமிகண்ணு பார்த்தார்.மற்றவர்கள் யாரும் பார்க்கவில்லை என்றால் நான் கண்டுக்கவில்லை.வெட்டுகத்தியை போலீஸ் ஸ்டேசனில் ஒப்படைத்தேனா என்றால் அவர்கள் அடித்துவிட்டு போய்விட்டார்கள். கருங்கல்லை தற்போது தான் முதல் முதலாக பார்த்தேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் போலீசார் படித்து காட்டினார்கள் என்றால் இல்லை.போலீசார் சொல்லி கொடுத்தன் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் விசாரித்த பிறகு போலீசார் எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.82/2020**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 3ம் நாள் வியாழ்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: சரசு** | **வயது** | **:** | **67** |
| **க/பெ.** | **: சண்முகம்** | **தொழில்** | **:** | **இல்லதரசி** |
| **ஊர்** | **: பூசாரியூர்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: நாட்றம்பள்ளி** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பூசாரியூர் கிராமத்தில் வசிக்கிறேன்.இல்லதரசியாக உள்ளேன்.வழக்கின் எதிரிகளை தெரியும். ( மனுவின் பேரில் ஆஜரில்லை).அ.சா.1 எனது மகன். 1ம் எதிரி என்னுடைய மச்சினன். 2ம் எதிரி எனது ஓரகத்தி. 3ம் எதிரி அவர்களது மகன். எதிரிகளுக்கும் எங்களுக்கும் வரப்பு தகராறு பிரச்சனை இருந்து வருகிறது.சுமார் 3 1/2 ஆண்டுகளுக்கு முன்பு, 1ம் எதிரி நிலத்தில் வரப்பை கழித்து எடுத்துக்கொண்டிருந்தார். அ.சா.1 எனது மகன் அது குறித்து கேட்டார். அப்போது 1 முதல் 3வரையிலான எதிரிகள் மூன்று பேரும் ஏடாகூடமாக வாய்க்கு வந்தப்படி பேசினார்கள். அவர்கள் மூன்று பேருமே என்னை பார்த்து தேவிடியா 2 ஆம்பிடியான் கட்டியவளே என பேசினார்கள். அ.சா.1 எனது மகன் எனது அம்மாவை ஏன் அவ்வாறு பேசுகிறீர்கள் என கேட்டார்.அப்போது 1ம் எதிரி ஒரு கல்லையையும், 3ம் எதிரி ஒரு கத்தியையும் தூக்கி கொண்டு வந்தார்கள். 1ம் எதிரி சற்று தூரத்தில் நின்றுக்கொண்டு கல்லை தூக்கி என் மகனின் தலை மீது போட்டார். அதில் என் மகனுக்கு காயம் ஏற்பட்டது. ரத்தமாக ஓழுகியது. என் மகனுக்கு சுமார் 2 லிட்டர் ரத்தம் போய்விட்டது. ரத்தத்தை பார்த்து அவர்கள் சென்றுவிட்டார்கள். எனது மகனை ஆம்பூலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் சம்பவ இடத்தை வந்து பார்த்தார்கள். மூன்று இடங்களில் ரத்தம் உறைந்திருப்பதை பார்த்து எழுதிக்கொண்டு வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எனக்கும் 1ம் எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான்.நிலம் சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்தது என்று சொன்னால் சரிதான்.

பஞ்சாயத்தில் அளந்து எடுத்து சொல்லி நாங்கள் கேட்காமல் வந்துவிட்டோம் என்று சொன்னால் பஞ்சாயத்தில் எங்களை அடிக்க வந்தார்கள்.சம்பவம் நடந்து கொண்டிருந்த போது போலீசார் வந்துவிட்டார்களா என்றால் மருத்துவமனையில் வந்து வாக்குமூலம் பதிவு செய்த பிறகு தான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவம் நடந்த அன்றே போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் சரிதான்.அப்போது 03.00 மணி இருக்கும் என்றால் சரிதான்.அப்போது போலீசாரிடம் கல்லை, வெட்டுகத்தியை எடுத்து கொடுத்தேன் என்றால் கல்லை எடுத்து கொடுத்தேன். வெட்டுகத்தியை அவர்களே எடுத்து சென்றுவிட்டார்கள். சம்பவம் நடந்த போது 20, 30 பேர்கள் இருந்தார்கள் என்றால் மனோகரன், மற்றும் சாமிகண்ணு ஆகிய இரண்டு நபர்கள் மட்டும் இருந்தார்கள்.அவர்களை சாட்சி சொல்ல அழைத்து வந்தோம் என்று சொன்னால் சரிதான்.நிலம் சம்மந்தமாக சிவில் வழக்கு நடந்ததா என்றால் இல்லை. எனது வீட்டிற்கும் 1ம் எதிரியின் நிலத்திற்கும் 1/2 பல்லாங்கு தூரம் என்றால் தோராயமாக 200 அடி தூரம் இருக்கும். போலீஸ் ஸ்டேசனுக்கு போனோமா என்றால் போனோம். நாங்கள் கேஸ் கொடுக்க தான் போனாம்.அங்கு போலீசாரிடம் கையெழுத்தை போட்டோமா என்றால் இல்லை. எங்களையும், எதிரிகளையும் சமாதனம் செய்து அனுப்பி விட்டார்கள்.அதற்கு பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.எனக்கு சம்பவத்தை எதுவும் தெரியாது என்றாலும், தகவல் தெரிந்து தான் சென்றேன் என்றால் சரிதான்.சாட்சி மீண்டும் கோர்ட்டார் தெளிவாக கேட்டபோது, சம்பவம் நடந்த போது நான் அங்கு தான் உள்ளதாக சொன்னார்.வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.82/2020**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 3ம் நாள் வியாழ்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: வேண்டாமணி** | **வயது** | **:** | **39** |
| **க/பெ.** | **: வேலு** | **தொழில்** | **:** | **இல்லதரசி** |
| **ஊர்** | **: பூசாரியூர்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: நாட்றம்பள்ளி** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பூசாரியூர் கிராமத்தில் வசிக்கிறேன்.இல்லதரசியாக உள்ளேன்.வழக்கின் எதிரிகளை தெரியும். ( மனுவின் பேரில் ஆஜரில்லை).1ம் எதிரி எனது சின்ன மாமனார். 2ம்எதிரி எனது சின்ன மாமியார். 3ம் எதிரி அவர்களது மகன். அ.சா.1 எனது மச்சினன். அ.சா.2 எனது மாமியார்.எதிரிகளின் நிலம் எங்களது நிலமும், அருகே அருகே உள்ளது. கடந்த 03.07.2018ம்தேதி மதியம் 12.00 மணியளவில் வழக்கின் எதிரிகள் வரப்பை வெட்டி போட்டுக்கொண்டிருந்தார்கள். அ.சா.2 எனது மாமியார் ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என கேட்டார். 3ம் எதிரி அ.சா.2ஐ பார்த்து தேவிடியா என அசிங்கமாக திட்டி, கட்டி போட்டு அடித்தால் கூட உங்களை கேட்பதற்கு ஆள் இல்லை என சொன்னார்.நான் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தேன். 1ம் எதிரி கல்லை எடுத்து வந்தார். 3ம் எதிரி கத்தியை எடுத்து வந்தார். 1ம் எதிரி கல்லால் அ.சா.1ஐ தாக்கியதில் ரத்தம் வந்தது. தலையில் ஓட்டை ஆகிவிட்டது. ஒரு வாரம் அரசு மருத்துவமனையிலிருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு பிள்ளைகள். இரண்டு பிள்ளைகளின் பிறந்ததேதி என்னவென்றால் முதல் குழந்தை பிறந்த தேதி 28.10.2004, 2வது குழந்தை பிறந்த தேதி 28.11.2009 ஆகும். எதிரிகளுக்கும் எங்களுக்கும் நிலம் சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வருகிறது என்றால் இல்லை. நிலப்பிரச்சனை இருந்தது. பேச்சு வார்த்தை இல்லை. எத்தனை வருடமாக எதிரிகளுக்கும் எங்களுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் 5 வருடமாக பேச்சு வார்த்தை இல்லை.நிலம்

சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது அவர்கள் அடங்கவில்லை.சம்பவம் வீட்டின் வாசலில் நடந்ததா என்றால் எங்கள் வீட்டிற்கு முன்னே நடந்தது. பக்கமே நடந்தது. களத்தில் நடந்தது.தற்போது சொன்னவாறு தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் விசாரிக்கவில்லை.சம்பவம் நடந்த அன்றே போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சுமார் 03.00 மணி இருக்கும்.அப்போது வெட்டுகத்தியை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் 3ம் எதிரி கத்தியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என நினைக்கிறேன். கல் மட்டும் அங்கே இருந்தது.போலீசாரிடம் கல்லை எடுத்துகொடுத்தேனா என்றால் போலீசாரே கல்லை எடுத்து சென்றார்கள். போலீசார் கல்லை எடுத்து செல்லும்போது என்னை தவிர வேறு யாருமில்லை என்றால் என் வீட்டுக்காரர் இருந்தார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்மந்தமாக முன் விரோதம் என்றால் சரிதான். இரண்டு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நிலம் நான்கு இடத்தில் இருக்கிறது என்றால் இரண்டு இடத்தில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யார் இருந்தார்கள் என்றால் யாருமில்லை. 3ம் எதிரி வெட்டுகத்தியை எடுத்து வந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை. ஒன்று தான் போட்டேனா என்று கூட ஞாபகமில்லை.போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றேனா என்றால் சென்றேன். யார் யார் சென்றோம் என்றால் நானும் எனது மாமியார் சரசு சென்றோம். என்னையும் எனது மாமியார் சரசுவையும் போலீசார் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேனா என்றால்போட்டேன். அப்போது எதிரிகள் இருந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் ஒளிந்திருந்தார்கள். மேற்சொன்ன விபரங்களை 03.00மணிக்கு போலீசார் வந்த போது கூறினேனா என்றால் கூறினேன். இரண்டு வீட்டிற்கு கதவுகள் உள்ளதா என்றால் உள்ளது. வீட்டிற்கு முன்பாக உள்ள களம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மேற்கு பக்கத்தில் உள்ள வீடும் களமும் அ.சா.1 கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டது. கிழக்கு பக்கத்தில் உள்ள வீடும் களமும் எங்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்சொன்ன சங்கதிகளை போலீசார் விசாரிக்கும் முன்பு சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனது வீட்டின் முன்பு தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் எதிரிகளின் நிலத்திற்கும் சுமார் 500 மீட்டர் இடைவெளி உள்ளது என்றால் சுமார் 300 மீட்டர் இடைவெளி உள்ளது. அ.சா.1ன் வீட்டிற்கும் எதிரிகளின் நிலத்திற்கும் 300 மீட்டர் இடைவெளி உள்ளது என்றால் தெரியாது. மேற்சொன்ன சங்கதிகளை 03.00மணிக்கு போலீசார் வந்த போது கூறினேனா என்றால் கூறினேன். நான் சொல்ல சொல்ல போலீசார் பேனாவில் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.அதில் கையெழுத்து போட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்லி போலீசார் எழுதிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். எனது மாமியாரிடம் வாக்குமூலம்

வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள்.சம்பவம் எப்படி நடந்தது என்பது பற்றி பயத்தில் சரியாக ஞாபகமில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமில்லை என்றால் அ.சா.1 எங்கோ கீழே விழுந்த காயத்தை வைத்துக்கொண்டு எதிரிகளின் மீது ஏற்கெனவே இருந்த நிலம் விரோதத்தை வைத்துக்கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

ம.வி:-

இல்லை